# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

அசல் மனு எண். 914/2016/ ந

ஆணை எண். 158/2016

நாள் : 04/10/2016

**திரு. ம. முத்துக்குமார், – மனுதாரர்**
**எண்.186, ராஜா மில் ரோடு, பொள்ளாச்சி,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

**நகராட்சி அலுவலர்கள்**
**மற்றும் பணியாளர்கள், – எதிர் மனுதாரர்**
**பழநி நகராட்சி.**

## ஆணை

மனுதாரரது 02.08.2016 நாளிட்ட மனு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு முகவரியிடப்பட்ட 18.05.2016 நாளிட்ட மனுவின் நகல் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககத்தின் 03.06.2016 நாளிட்ட கடித நகல் ஆகியவை 06.09.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டது.

2. இது குறித்து பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவ 09.09.2016 நாளிட்ட அறிவிப்பாணையின்படி மனுதாரருக்கு தகவல்கள் அளித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

> *"2015–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதிகளில்,விதி 4ன் படி முறை மன்ற நடுவருக்கு தாக்கல் செய்யப்படும் குற்றச்சாட்டு இம்முறைமன்ற நடுவச் செயலரிடம் நேரில் அல்லது பதிவு அஞ்சலில், எழுத்தில் படிவம்–1ல் தாக்கல் செய்யப்படவேண்டும் படிவம்–1 இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி, படிவத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களுடன் ரூபாய் பத்துக்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் குற்றச்சாட்டு / முறையீட்டு மனுவினை அனுப்பி வைக்கவேண்டும்."*

மேலும், விதி 5ன் படி, எதிர்மனுதாரர்களின் எண்ணிக்கைக்கேற்ப புகார் மனுக்களின் பிரதிகள் அவற்றின் இணைப்புகளுடன் தாக்கல் செய்யப்படவேண்டுமென்பதும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3)(c)ன் படி முறையீட்டில் கூறப்படும் நிகழ்வு ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டதாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே இம்முறை மன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததாக கருதப்படும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டு ஆணையிடப்பட்டது.

3. ஆனால், மனுதாரர் ஒரு நகராட்சி அலுவலராக (கணக்கர், நகராட்சி அலுவலகம், மேட்டூர்) இருந்தபோதும், மேற்படி ஆணைகளை முழுமையாக பின்பற்றாமல், போதிய அளவு மனுவின் நகல்கள் மற்றும் ஆதாரங்களின் நகல்கள் எதனையும் சமர்ப்பிக்காமல், உரிய படிவத்தில் நீதிமன்ற வில்லையுடன் மட்டுமே மீள 22.09.2016 நாளிட்ட பிறிதொரு மனுவினை அனுப்பி வைத்துள்ளார்.

4.மேலும், மனுதாரர் கூறியுள்ள நிகழ்வுகள் எல்லாம் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மீதான 1992–93, 2001–02,1969–70 மற்றும் 1997–98 ஆகிய காலங்கடந்த ஆண்டுகளுக்கான வரி வசூல் இழப்பீடு தொடர்பானதாக உள்ளது. அத்துடன் இவை குறித்த தணிக்கைத் தடை அறிக்கைகளோ வேறு எந்தவித ஆதாரங்களோ அளிக்கப்பட்வில்லை. எனவே, மேற்கூறிய சட்டம், பிரிவு10 (3) (c) ன்படி இம்முறையீடு இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததல்ல என தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   மதுரை மண்டலம்,
   மதுரை.

2. திரு. ம. முத்துக்குமார்,
   எண்.186, ராஜா மில் ரோடு, பொள்ளாச்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
   பழநி நகராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.